RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22438

OPEN ACCESS

# பத்துப்பாட்டில் வாழ்வியல் கோட்பாடுகளில் நிலவளங்கள்

**சி.பு. இந்துஜா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, சிந்திக் கல்லூரி, பூந்தமல்லி, சென்னை-600077, தமிழ்நாடு, இந்தியா.

# Land Resources in Patthuppaattu Principles of Life

**S.P. Induja [a, *]**

[a] Department of Tamil, Sindhi College of Arts & Science, Poonamallee, Chennai-600077, Tamil Nadu, India

* Corresponding Author: spinduja@gmail.com

Received: 28-05-2022
Revised: 26-09-2022
Accepted: 03-10-2022
Published: 17-10-2022

Check for updates

**ABSTRACT**

Literature is powerful. Literature has the power to change the history of the world. Literature is the indestructible wealth of the people of the Sangam age. The Sangam literature is divided into two parts, Akatthinai and Puratthinai. The principle of thinai belongs only to Tamils. There is no principle of Thinai in any language of the world's languages. The word 'Thinai' should be divided into Thin +ai. The word 'thin' means moral strength means and 'i' denotes having it. All five kinds of land were stepping stones to human progress. The bodies and minds of the early men were firmly established. Little by little, they learned many professions and progressed. Although social life and the economy have improved in today's time, the study of land resources in the ten principles of life is of special importance. This study also reveals how in the Sangam literature, both men and women, worked and lived happily through five kinds of lands. Agriculture was done well in the lands. At that time, they also knew the techniques for protecting crops from wild animals. The main reason why the people of the Sangam age live with morality is the spirit of God. They celebrated many festivals during that period. The unity of the people also improved. The purpose of this study is to know the significance of Sangam literature from the smallest to the greatest in today's society.

**Keywords:** Sangam Literature, Patthu Pattu, Thinai, Land

## முன்னுரை

தமிழ் மக்களுக்கு இயற்கையில் இருந்த ஈடுபாடும் இயற்கையைச் செய்யுளுக்குப் பின்னணியாக அமைக்கும் முறையும் பார்க்கும்போது பெரும் வியப்பைத் தருகின்றன. இவ் உலகமானது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்களால் ஆனது. உயிர்கள் வாழ்வதற்கு இவற்றுள் முதன்மையாகத் திகழ்வது நிலமாகும். நிலத்தினை ஐந்து கூறுகளாக அளவீடு செய்தனர். அதனை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பாகுபடுத்தினர். ஐந்து திணைக்கும் பண்டைய தமிழர் கொடுத்த பெயர்கள் அவர்கள் எத்தனை அளவிற்கு இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தார்கள் எனச் சுட்டிக்காட்டுகிறது.

## திணை கோட்பாடுகள்

சங்க இலக்கியம் பற்றிய பார்வையை தொல்காப்பியமும் அதற்குள்ளாக உரைகளும் விளக்குகின்றன. திணை இலக்கியம் படைக்கும் போது எத்தகைய முறையைப் பின்பற்ற வேண்டும்

என்றும் திணைக் கோட்பாட்டில் தொல்காப்பியர் எடுத்துரைத்துள்ளார். செய்யுள் மக்களால் படைக்கப்படுவது ஆகும். அதனால் மக்கள் வாழ்வே அதன் பாடுபொருள் ஆகிவிடுகிறது. இதனை அகப்பொருள், புறப்பொருள் என்று குறிப்பிட்டனர். பழந்தமிழர் இப்பாகுபாடுகளைத் திணை எனவும் கூறினர். இருவகை வாழ்க்கையிலும் நிகழும் ஒழுகலாறுகளைக் குறிப்பிடுவதால் அவை முறையே அகத்திணை புறத்திணை என இரு பெயர் பெற்றன.

அகப்பொருள் திணைகள் ஏழு அவை கைக்கிளை, குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை ஆகும். நடுவில் கூறப்பட்ட குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவை நடுவண் ஐந்திணை என்பர். கைக்கிளை ஒருதலைக் காமம் என்றும், பெருந்திணை என்பது பொருந்தாக் காமம் என்றும் அழைப்பர். தொல்காப்பியர் அகத்திணைகள் போலவே புறத்திணைகள் ஏழு என்பார். அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பன ஆகும். தொல்காப்பியர் பொருளை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்று நிலைகளில் பகுத்துக் கொள்கிறார். இதனை,

“முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே,

நுவலுங் காலை முறை சிறந்த னவே

பாடலுள் பயின்றவை நாடும் காலை”

கூறுகின்றது (Shanmugam Pillai, 2007). முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை ஆகிய ஐந்து திணைகளும் முதல், கரு, உரி என்ற முப்பொருளால் வழங்கப்பட்டன. உலக இயக்கம் பற்றி பேசும் போது இம் மூன்று சொற்களிலும் உலகச் செயல்களை அடக்கிவிடுகிறார். முதற்பொருளாவன நிலமும் பொழுதும் ஆகும். இதனை,

“முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்

இயல்பு என மொழிப இயல்பு உணர்ந்தோரே"

கூறுகின்றது (Shanmugam Pillai, 2007).

கருப்பொருள் ஆவன நிலத்திலும், பொழுதிலும் கருக்கொண்டு எழும் மக்கள், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், தொழில் ஆகியவை ஆகும். இதனை

"தெய்வம் உணாவே மா மரம் புள் பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ,

அவ்வகை பிறவும் கருவென மொழிப."

கூறுகின்றது (Shanmugam Pillai, 2007). இதனை இன்று சுற்றுச் சூழலியல் என்று அழைக்கிறோம். சுற்றுச்சூழல் தான் வாழ்வின் அடிப்படை ஆதாரமாக அமைகிறது. உரிப்பொருளாவன பாடலில் இடம்பெறும் காதல் ஒழுக்கமும், அதன் நிமித்தமும் ஆகும்.

## குறிஞ்சி

மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது. குறிஞ்சி நில மக்களை கானவர், குறவர், குன்றவர் என அழைத்தனர். இவர்கள் மலைப்பகுதிகளில் வாழ்ந்ததால் அதற்கேற்ற கரடுமுரடான உடல்வாகு கொண்டிருந்தனர். இதனை,

"யானை தாக்கினும், அரவும் மேற்செலினும்,

நீல்நிற விசும்பின் வல்ஏறு சிலைப்பினும்,

சூல்மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை"

கூறுகின்றது (Mohan, 2007).

## குடியிருப்புகள்

குறிஞ்சி நில மக்களின் இருப்பிடம் குடிசைகளாகக் காணப்பட்டது. இவர்களின் குடிசைகள் சேர்ந்திருக்கும் பகுதியை சிறுகுடி என்றனர். இதனை,

"குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து"

கூறுகின்றது (Mohan, 2007).

## குறிஞ்சி நில மக்களின் தொழில்கள்

குறிஞ்சி நில மக்களாகிய குறவர்கள் காட்டில் வாழும் விலங்குகளோடு போரிட்டு வெற்றி பெற்றனர். இவர்கள் வில்லாற்றலில் சிறப்பு வாய்ந்தவர்களாக கருதப்பட்டனர். இதனை,

"சிலைநவில் ஏறுழ்த்தோள் ஒச்சி, வலன் விளையூஉ"

கூறுகின்றது (Mohan, 2007).

வேட்டையாடுதல் குறிஞ்சி நில மக்களின் முக்கிய தொழிலாகக் கருதப்பட்டது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

## பயிர்களைக் காவல் புரிதல்

குறவ மக்கள் தினைக் கதிர் முற்றும் பருவத்தில் அதனைக் கவர வரும் பறவைகளை மேலிருந்து கற்களால் எறிவர். குறவர்கள் இரவுப்பொழுதில் யானைகள் வந்து தினைப் புனத்தை அழித்து விடாமல் காவல் புரிந்தனர். யானைகள் வந்துவிட்டால் இருட்டில் தீக்கொள்ளியால் எறிந்தனர்.

இதனை,

"துணையின் தீர்ந்த கடுங்கண் யானை

அணையக் கண்ட அம் குடிக் குறவர்

கணையர், கிணையர், கை புனை கவணர்,

விளியர், புறக்குடி ஆர்க்கும் நாட"

கூறுகின்றது (Balasubramanian, 2007). அக் கால மக்கள் காட்டு மிருகங்களிடம் இருந்து தம்மைப் பாதுகாக்கவும் கற்றிருந்தனர். இன்றும் விவசாயிகள் பயிர்களைக் கொடிய மிருகங்களிடமிருந்து பாதுகாக்க பல உத்திகளைக் கையாண்டு வருகின்றனர்.

## சிறுவர் சிறுமியரின் பொழுதுபோக்கு

குறிஞ்சி நில சிறுவர், சிறுமியர்கள் தங்கள் கூந்தலில் மலையிலுள்ள வேங்கை மலரினைச் சூடினர். துறைகளிலும் அருவிகளில் நீராடி மகிழ்ந்தனர்.

## குறவரின் மலைக் கடவுள்

குறவ மக்கள் தெய்வம் முருகப் பெருமான் ஆவார். குறவரும், குறவ மகளிரும் முருகப்பெருமானை வாழ்த்தி வணங்கினர். அப்பெருமானை வேங்கை மலரால் அலங்கரித்தனர். இவர்களின் முழங்கும் பறை முருகியல் ஆகும். கோடு என்னும் ஊதுகொம்புகளாலும் முழக்கம் எழுப்பினர்.

## முருகப்பெருமானுக்கு வெறியாடல்

வீட்டின் முற்றத்தில் நறுமணல் பரப்பப்பட்டு மலர்களால் அலங்கரிதனர். முரு கப்பெருமானுக்கு உரிய சேவற்கொடி நட்டு வைக்கப்பட்டிருக்கும். அப் பூசையில் குருதிப் பலியுடன் செந்தினையைக் கலந்து இறைவனுக்கு தூவி வழிபடுவர். இவ் வழிபாடு இரவின் சாமப்பொழுதில் நடந்ததாகத் தெரியவருகிறது. இதனை,

"வேலன் தைஇய வெறிஅயர் களனும்"

கூறுகின்றது (Mohan, 2007). இக்கருத்தை சங்கத் தமிழர் வாழ்வியல் என்னும் நூலில் கூறியுள்ளார்.

## குறிஞ்சி நில மக்களின் உணவுகள்

மலைப்பகுதிகளில் உள்ள மிருகங்களின் தசைகளையும், மலைத் தானியங்களையும், இனிய பலவகையான பழங்களையும் உண்டனர். இவர்கள் விரும்பி உண்ணும் உணவு மானின் தசையும், முள்ளம்பன்றியின் தசையும் ஆகும்.

## சிறுவர் சிறுமியரின் பொழுதுபோக்கு

குறிஞ்சி நில சிறுவர் சிறுமியர்கள் தங்கள் கூந்தலில் மலையிலுள்ள வேங்கை மலரினைச் சூடினர். சுனைகளிலும், நீர்களிலும், நீராடி மகிழ்ந்தனர். வெண்பளிங்கு கரைந்தோடி வருவது போல பாய்ந்து வரும் அருவி சுனைகளில் ஆசைதீர நீராடினர். பின்னர் முதுகில் தாழ்ந்து கிடக்கும் நீலமணி போன்ற கூந்தலை ஈரம் போகத் துவட்டி உலர வைத்தனர். அப்பெண்களின் கண்களெல்லாம் சிவந்திருந்தன. இதனை,

"தவிர்வு இல் வேட்கையேம் தண்டாது ஆடி

பளிங்கு சொரிவு அன்ன பாய்சுனை குடைவுழி

நளிபடுசிலம்பில், பாயம் பாடி,

பொன்எறி மணியின் சிறுபுறம் தாழ்ந்த எம்

பின் இருங் கூந்தல் பிழிவனம் துவரி"

கூறுகின்றது. அக்கால மகளிர் சுனைகளில் மகிழ்ச்சியோடு நீராடிய முறையை அறியமுடிகிறது (Nagarasan, 2007). இன்றும் கோடை காலங்களில் நகரங்களில் வாழ்கின்ற மக்களும் அருவிகளை நாடிச் செல்கின்ற வழக்கம் நடை முறையில் உள்ளது.

## முல்லை நிலம்

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என அழைக்கப்பட்டது. முல்லை நிலத்தில் மரம், செடி கொடிகள் அடர்ந்து காணப்பட்டதால் நீர் தங்காமல் வடிந்தோடிக் கொண்டிருந்தது. குன்றுகளையும், கரடுமுரடானப் பகுதிகளையும் கொண்டது முல்லை நிலம் ஆகும்.

மலையில் வாழ்கின்ற வேட்டுவர் குன்றவர் எனப்பட்டனர். குன்றவர் என்னும் சொல் குறவர் எனத் தொகைக்கப்பட்டது. மலை நிலத்தோடும், ஆண்டுத் தோன்றும் கருப்பொருள்களோடும் தம்மைப் பிணைத்துக் கொண்ட வாழ்க்கை முறை இவர்களுடையது என்னும் செய்தியை இலக்கியச் சிந்தனை என்னும் அவர்கள் கூறியுள்ளார் (Balasubramanian, 2009).

முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் கோவலர்கள், ஆயர், இடையர், இடைச்சியர் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டனர். இவர்கள் ஆடு, மாடுகளை மேய்த்ததால் இப்பெயர் பெற்றனர். இவர்களின் தெய்வம் திருமால் ஆகும்.

## குடியிருப்புகள்

முல்லை நிலத்து மக்கள் குடிசைகளில் வாழ்ந்தனர். குடிசைகள் குறுகிய கால்களால் வேயப்பட்டிருந்தது. அக் கால்களில் ஆட்டுக்குட்டிகள் தின்னுவதற்கு உரியத் தழைகளைக் கட்டியிருந்தனர். குடிசையின் வாயில்கள் சிறு தூறுகளால் அமைந்திருக்கும். கழிகளினால் கட்டப்பட்ட கதவுகளைக் கொண்டது. வீட்டு முற்றங்களில் மாடுகளைக் கட்டி வைத்திருந்தனர். வெள்ளாடும் செம்மறி ஆடும் தங்குவதற்கு உரிய கிடைகளும் அவர்களிடம் காணப்பட்டன.

இதனை,

“செற்றை வாயில், செறிகழிக் கதவின்

கற்றை வேந்த கழித்தலைச் சாம்பின்

அதளோன் துஞ்சும் காப்பின் உதள

நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்,

கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்

இடுமுள் வேலி எருப்படு வரைப்பின்,

நள்இருள் விடியல் புள்ளெழப் போகி”

வரிகள் உணர்த்துகின்றது (Mohan, 2007). இப் பாடல் வரிகள் மூலமாக முல்லை நிலம் சார்ந்த குடியிருப்புகள் அக் காலத்தில் அமைந்திருந்த விதத்தை அறிய முடிகிறது.

## தலைவி ஆற்றியிருத்தல்

தலைவன் போருக்குச் செல்லப் போகிறான் என்பதை குறிப்பால் உணர்ந்த தலைவி வருத்தம் அடைகிறாள். அதனால் தலைவன் அவளைச் சமாதானப்படுத்தியப் பிறகுச் செல்கிறான். எனினும் தலைவியால் தலைவனதுப் பிரிவைத் தாங்க முடியவில்லை. வயதில் முதிர்ந்த பெண்கள் அவளைத் தேற்றுகிறார்கள். தலைவன் தான் மேற்கொண்ட போரை வெற்றிகரமாக முடித்து விட்டுத் திரும்புகிறான். முல்லைத் திணையின் ஒழுக்கம் ஆற்றியிருத்தல் என்பதை முல்லைப்பாட்டு சிறப்பாக எடுத்துக் கூறுகிறது. இச் செய்தியை வேதங்களை ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள் என்னும் நூலில் கூறியுள்ளார் (Lakshminarayanan, 2005).

## முல்லை நில மக்களின் தொழில்கள்

ஆநிரைகளை மேய்ப்பது இவர்களின் முக்கியத் தொழில்கள் ஆகும். ஆநிரைகளை ஓட்டும் ஆயர்கள் கையில் தடியைக் கொண்டிருந்தனர். ஆநிரைகளுக்கான தழைகளைப் பறிப்பதற்கு ஏற்றக் கோல் அவர்களிடம் இருந்தது. உடல்களில் எப்பொழுதும் தழும்புகள் காணப்பட்டன. நீரூற்றுகள் தோண்டுவதற்கான குந்தாலியும் வைத்திருந்தனர். இவர்கள் தோள்களிலும் தலையிலும் உறியினைக் கொண்ட காந்தண்டினால் பொருட்களை சுமந்து செல்வர். தலை மயிர்கள் பால் மனத்துடன் காணப்பட்டது. ஆடைகளும் அழுக்குடன் காணப்பட்டது. இதனை,

"ஓங்கு மிசைக்

கோட்டவும் கொடியவும் விரைஇ, காட்ட

பல்பூ மிடைந்த படலைக் கண்ணி,"

கூறுகின்றது (Mohan, 2007).

இதனால் முல்லை நில மக்களின் செயல்பாடுகள் எவ்வாறு அமைந்திருந்தது என தெரிந்துகொள்ள முடிகிறது. வரகு, கேழ்வரகு, ஆகிய தானியங்களியும், அவரை, துவரை போன்றவற்றையும் பயிர் செய்தனர். கால்நடைகளில் இருந்து கிடைக்கும் பால், தயிர், மோர், நெய் போன்றவற்றை பாண்டமாற்றாகவும் விற்றனர். குறிஞ்சி நிலத்து மக்களை விட முல்லை நில மக்களின் வாழ்க்கை சற்று மேலோங்கிக் காணப்பட்டது.

## இசைக் கருவிகள்

முல்லை நில மக்களின் இசைக்கருவி, புல்லாங்குழல் ஆகும். இதனை ஊதுகருவி, சிறுகுழல், ஆம் தீம் குழல் எனப் பலவகைப் பெயர்களால் அழைத்தனர். இதனை,

"ஆம்பல் ஆம் தீம்குழல் தெள்விளி பயிற்ற"

கூறுகின்றது (Mohan, 2007).

## முல்லை நில மக்களின் உணவுகள்

ஆயர் மகளிர் தினை, வரகு போன்றவற்றையும், பால், கூழ், இறைச்சியையும் முக்கிய உணவாக உட்கொண்டனர். அவரைப் புழுக்கினையும் உட்கொண்டனர். இதனை,

"குறுந்தாள் வரகின் குறள்அவிழ்ச் சொன்றி,

புகர்இணர் வேங்கை வீகண் டன்ன,

அவரை வான்புழுக்கு அட்டி பயில்வுற்று,

இன்சுவை மூரல் பெறுகுவிர்"

கூறுகின்றது (Mohan, 2007). முல்லை நிலம் பல வளங்களைக் கொண்டிருந்தது என்றும் அதனால் பலவகையான உணவுகளை அம் மக்கள் உட்கொண்டனர் என்பதையும் அறியலாம்.

## மருத நிலம்

வயலும் வயலைச் சார்ந்த பகுதியும் மருதம் எனப்படும். இம் மக்கள் உழவுத் தொழிலைச் செய்தனர்.

## குடியிருப்புகள்

மருத நில மக்களின் இல்லங்கள் வரகு, வைக்கோல் இவற்றால் வேயப்பட்டிருந்தன. வீடுகளின் அருகில் கலப்பைகள் வைக்கப்பட்டிருந்தன. முற்றங்களில் வரகு முதலிய தானியங்களைக் கொண்டு விளங்கும் குதிர்கள் காணப்பட்டன. மருத நில மக்களின் தெய்வம் இந்திரன் ஆவான். மருத நில மக்கள் பசியை அறியாதவர்கள். சிறு குழந்தைகள் தாயின் மார்பில் பால் உண்டு படுக்கையில் துயிலுவர். மருத நில மக்கள் உணவில் எந்த குறைபாடும் இல்லாமல் வளப்பத்தோடு வாழ்ந்தனர் என அறிய முடிகிறது. இதனை,

"தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை

மல்லல் பேர்ஊர் மடியின் மடியா"

கூறுகின்றது (Mohan, 2007).

நகரங்கள் முதன் முதல் தோன்றியது உழவுத் தொழிற்குச் சிறந்த மருத நிலமே ஆகும். உழவுத் தொழிலும் நிலையான குடியிருப்பும் ஊர்ப்பெருக்கமும் நாகரிகம் தோன்றுவதற்குப் பெரிதும் துணை செய்தன. இச்செய்தியை பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும் என்னும் நூலில் மொழி ஞாயிறு இல் கூறியுள்ளார் (Devaneya Pavanar, 2017).

## தொழில்கள்

ஆற்றில் உள்ள நீரை நேரடியாக நீர் நிலைகளில் தேக்கி வைத்து உழவுத் தொழில்கள் செய்தனர். அக்காலத்தில் நாட்டின் முன்னேற்றத்திற்கும் மக்களின் வாழ்விற்கும் அடிப்படை உழவுத் தொழில் ஆகும். உழவுத் தொழிலுக்கு எருதுகளைப் பயன்படுத்தினர். எருதுகள் என்பது காளைகளைக் கூறுகின்றது. உணவு உற்பத்திக்கான அடிப்படைக் ஆதாரமாக மருத நிலம் விளங்கியிருய்ந்தது.

## விவசாயிகளின் செயல்கள்

விவசாயிகள் பருவம் அறிந்து பயிர் செய்தனர். பருவக் காலங்களுக்கு ஏற்ப பயிர் செய்ததால் நல்ல மகசூல் கிடைத்தன. இதனை,

"நீர்த் தெவ்வு நிரைத் தொழுவர்
பாடு சிலம்பு இசை, ஏற்றத்
தோடு வழங்கும் அகல் ஆம்பியின்
கயன் அகைய வயல் நிறைக்கும்,
மென் தொடை வன் கிழா அர்,
அதரி கொள்பவர் பகடு பூண் தெள்மணி
இரும் புள் ஒப்பும் இசையே என்றும்"

கூறுகின்றது (Nagarasan, 2007). மக்கள் இன்னலின்றி மகிழ்ந்து வாழும் நிலையை இதனால் உணரமுடிகிறது.

## மருத நில சிறுவர்கள்

இங்குள்ள சிறுவர்கள் நீர்முள்ளிப்பூவையும், நெய்தல் பூவையும், மாலையாக அணிந்தனர். சண்பங்கோரையின் தாதுவை தங்களுடைய மார்பில் பூசிக் கொள்வர். இதனைத் தவிர அவலையும். உண்டு மகிழ்ச்சியுற்றனர். இதனை,

"அவல்எறி உலக்கைப் பாடுவிறந்து, அயல"

எனப் கூறுகின்றது (Mohan, 2007). இதனால் மருத நில சிறுவர்களின் மகிழ்ச்சியான வாழ்க்கை முறையை அறிய முடிகிறது.

## நெய்தல் நிலம்

கடலும் காடலைச் சார்ந்த இடமும் நெய்தல் என அழைத்தனர். இங்குள்ள மக்கள் தாங்கள் வாழும் ஊர்களைப் பாக்கம், பட்டினம் என அழைத்தனர். இவர்களின் தெய்வம் வருணன் ஆவான்.

## குடியிருப்புகள்

நெய்தல் நில மக்களின் குடியிருப்புகள் வஞ்சி, காஞ்சி மரங்களின் கம்புகளால் கட்டடப்பட்டிருந்தன. தாழை நாரால் கட்டித் தருப்பைப் புல்லால் கூரை வேயப்பட்டிருக்கும். இவர்களின் வீடுகளில் முன்புறம் மீன்பிடிக்கும் வலைகள் காணப்பட்டிருந்தன. பரதவர்கள் வலைகளை வெயிலில் உலர்த்தினர். புன்னை மரத்தின் கிளையால் அமைந்த பந்தல்கள் நெய்தல் நிலப் பகுதியில் ஆங்காங்கே காணப்பட்டன. இங்குள்ள மக்களைப் பரதவர், பரத்தியர், வலைஞர், வலைஞ்சியர், சேர்ப்பன், திமிலோன், நுளையர், நுளைச்சியர் என்று பல பெயர்களால் அழைத்தனர். இதனை,

"குறிஞ்சி பரதவர் பாட, நெய்தல்"

கூறுகின்றது (Mohan, 2007). மேலும்,

"வலைஞர் குரம்பை மா ஈண்டவும்"

கூறுகின்றது (Ragavaiyangar, 1951).

## தொழில்கள்

பரதவர் மீன்களைப் பிடிக்கச் செல்லும் பொழுது வரிசையாகக் கடலில் செல்வர். மீன்களைப் பிடித்துக் கொண்டுச் திரும்பும் பொழுது மிகுந்த ஆரவாரத்துடன் வந்தனர். இதனை,

"நிலவுக் கானல் முழவுத் தாழைக்

குளிர்ப் பொதும்பர், நளித் தூவல்,

நிரை திமில் வேட்டுவர் கரைசேர் கம்பலை"

கூறுகின்றது (Nagarasan, 2007). அக்காலத்தில் மீன்பிடித் தொழில் நடைபெற்றதால் மக்கள் மீனை உணவாக உட்கொண்டனர். கடலில் மீன்பிடிக்கும் போது ஏறக்குறைய அறுநூறு அடி ஆழத்திற்குள்ளாக நடைபெற்றது என்று நன்கு அனுபவப்பட்ட பேறறிஞர் கே. புஷ்மான் கூறியுள்ளதாக நம் நாட்டு கப்பற்கலை என்னும் நூலில் அ. இராகவன் பக்கம் -32 இல் கூறியுள்ளார்.

## உப்பு விளைவித்தல்

சங்க காலத்தில் உப்பு விளைவித்தல் என்பது பெருந்தொழிலாக நடைபெற்றது. உழாமலேயே உவர் நீரைப் பாத்திக் கட்டி உப்பை விளைவித்தனர். உப்பு வாணிபமும் செய்தனர். இதனை,

"நோன் பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த"

கூறுகின்றது (Mohan, 2007). உப்பு விளைவிக்கும் தொழில் சங்க காலத்தில் நடைபெற்றதை அறியலாம்.

## முத்துக் குளிக்கும் தொழில்

முத்துக் குளிக்கும் தொழில் பாண்டிய நாட்டில் உள்ள கொற்கையில் சிறப்பாக நடைபெற்றது. கொற்கை முத்து உலகப் புகழ் பெற்றது ஆகும். முத்துக்குளிக்கும் தொழிலில் ஏராளமான ஓடங்களும், தோணிகளும், கப்பல்களும், ஈடுபட்டிருந்தன. பாண்டிய நாட்டிற்கும் முத்துக் குளிக்குந் தொழிலால் ஏராளமானப் பொற்காசுகள் வந்துக் குவிந்தன. அக்காலத்தில் பரதவ மக்கள் இத்தொழில் நல்ல அனுபவத்துடன் கணப்பட்டனர்.

இதனை,

"முழங்கு கடல் தந்த விளங்கு கதிர் முத்தம்"

கூறுகின்றது (Nagarasan, 2007). முத்துக் குளிக்கும் தொழில் நம் நாட்டு முன்னேற்றத்திற்குச் சங்க காலத்தில் பெரிதும் உதவியது.

## உணவுப்பழக்கம்

நெய்தல் நில மக்கள் மீன், உப்புக் கண்டம், நண்டு, ஆமை, கள் போன்றவற்றை முக்கிய உணவாக உட்கொண்டனர். இதனை,

“கடல் இறவின் சூடு தின்றும்”

கூறுகின்றது (Ragavaiyangar, 1951).

## பாலை நிலம்

பாலை என்பது வெற்றிடம் ஆகும். இது தனி நிலம் அன்று. குறிஞ்சியும், முல்லையும் வளம் இழந்து காணப்பட்ட போது பாலை என அழைக்கப்பட்டது. பாலையில் வெயிலின் மிகுதியால் மரம், செடி, கொடி முதலியவைகள் காய்ந்துக் காணப்பட்டன. விலங்குகள் உணவும், நீரும் இல்லாது ஒய்ந்து காணப்பட்டன. இப் பகுதியை சுரம் என அழைத்தனர். இதனை,

“அருஞ்சுரம் இறந்த அம்பர்”

கூறுகின்றது (Mohan, 2007).

## பாலை குடியிருப்புகள்

பாலை நிலத்தில் வாழும் மக்கள் மறவர், மறத்தியர், எயினர், எயிற்றியர் எனப்பட்டனர். இவர்கள் வாழும் ஊர் குறும்பு எனப்பட்டது. இம் மக்களின் குடிசைகள் ஈந்தின் இலையால் வேயப்பட்டிருந்தன. குடிசைகளில் வில்லும் அம்பும் காணப்பட்டன. வேட்டைக்கு நாய்கள் வளர்த்தனர். இவர்கள் வாழும் ஊரைச் சுற்றிலும் முட்களால் அமைந்த வேலிகளும், காவற்காடும் அமைந்திருந்தது. இதனை,

“நீள்அரை இலவத்து அலங்கு சினை பயந்த
பூளைஅம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற அணிலொடு கருப்பை ஆடாது,
யாற்றுஅறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை அன்ன வைந்நுதி, நெடுந்தகர்,
ஈத்துஇலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை”

கூறுகின்றது (Mohan, 2007).

## மறவர்கள்

பாலை நிலத்தில் வாழும் மறவர்கள் உடல் வலிமைப் படைத்தவர்களாகக் காணப்பட்டனர். வளர்ந்த தலை மயிரினை உடையவர்களாகவும் இருந்தனர். தாடியையும் வைத்திருந்தனர். இவர்களின் ஆடைகள் செந்நிறம் கொண்டது. காலில் எப்பொழுதும் செருப்பு அணிந்திருந்தனர். இதனை,

“தழைந்த கோதை தாரொடு பொலியப்”

கூறுகின்றது (Nagarasan, 2007).

 DOI: 10.34256/irjt22438

## தொழில்கள்

வேட்டையாடுதல், வழிப்பறி செய்தல், ஆநிரைகளைக் கவர்தல், வழியில் வருபவர்களைத் துன்பப்படுத்துதல் முதலியன இவர்களது தொழில்களாகும்.

## பாலை நிற மகளிர்

பாலை நிற மகளிர் எயிற்றியர் எனப்படுவர். இவர்கள் கரம்புகளில் எறும்பு சேர்த்து வைத்திருக்கும் புல்லரிசியை எடுத்து வருவர். மகடு ஈன்ற மகளிர் மான் தோல் படுக்கையில் அமரச் செய்வர். ஆழ்ந்த கிணற்றில் இல்லூற்றாக ஊரும் நீரை முகந்து வருவர்.

ஊன் முதலியவற்றை உப்புக் கண்டம் செய்து சமைப்பர். உடும்புக் கறியையும், தினையில் இருந்து எடுத்த கள்ளையும் உண்ணுவர். இதனை

"களர் வளர் ஈந்தின் காழ்கண் டன்ன,

சுவல்விளை நெல்லின் செவ்அவிழ்ச் சொன்றி,

குமலி தந்த மனவுச்சூல் உடும்பின்"

கூறுகின்றது (Mohan, 2007).

## முடிவுரை

சங்க காலப் புலவர்கள் ஐவகை நிலங்களை சாட்சியாக வைத்துப் பாடல்கள் பாடியுள்ளனர். ஒவ்வொரு நிலத்தில் வாழும் மக்களும் தாங்கள் வாழும் நிலமே மிகப் பெரிய உலகமாகக் கருதி வாழ்ந்துள்ளனர். நிலங்களை மையமாகக் கொண்டு சங்க கால மக்கள் தங்களுடைய வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டனர். நில அமைப்புகளுக்கு ஏற்ப வாழவும் கற்றுக் கொண்டனர். இந்நில அமைப்பு முறை அவர்களின் சூழ்நிலை அறிவைக் காட்டுவன ஆகும். சங்க கால நிலவளங்கள் மூலமாக அவர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்தனர் என்பதையும் தெரிந்துக் கொள்ள முடிகிறது. அக்கால மக்களே உணவை உற்பத்தி செய்ததால் பெருமையோடும், மதிப்போடும் வாழ்ந்தனர். அம்மக்களின் குடியிருப்புகள், தொழில்கள், வாழ்க்கை முறை, உணவுகள் சிறுவர்களது பொழுதுப்போக்குகள் போன்றன ஒவ்வொரு நிலத்திற்க்கும் இடையே வேறுபட்டுக் காணப்பட்டது. ஒருவருக்கொருவர் இணக்கமாகவும் வாழ்ந்தனர் என்பததையும் அறிய முடிகிறது. புலவர்கள் இச் செய்திகளை இயற்கை அழகின் திறம் பிறழாமல் ஓவியமாக கண் முன்னேத் தீட்டியுள்ளனர். இக்கருத்தை மக்களுக்கு உறுதி பட பத்துப்பாட்டு மிக சிறப்பாக எடுத்து மொழிகிறது.

## References

Balasubramanian, K.V., (2007) Natrinai (Moolamum Uraiyum), New Century Book House, Chennai, India.

Balasubramanian, K.V., (2009) Ilakkana Ilakkiya Sindhanaigal, New Century Book House, Chennai, India.

Devaneya Pavanar, (2017) Mozhi Gnaayiru, Gowra Pathippaga Kuzhumam, Chennai, India.

Lakshminarayanan, K.C., (2005) Vethangalai eattru pottrum tamil illakkiyangal, L.K.M. Publications, Chennai, India.

Mohan, Ra., (2007) Perumpanatrupadai| Paathupattu, New Century Book House, Chennai, India.

Nagarasan, V., (2007) Maduraikanchi, New century book house, Chennai, India.

Ragavaiyangar, Ra., (1951) Pattinappalai Aaraichium Uraium, Annamalai Nagar, India.

Shanmugam Pillai, M., (2007) Tholkappiyam, paari niliyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License